தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 166 | 4 Pages | 13.1.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 166 | 4 பக்கங்கள் | 13.1.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்**

**விளக்கம்:**
**சினம் என்னும் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு ஒருவனுக்கு இனம் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.**

# தமிழ்தான் நம்மை இணைக்கும் தொப்புள்கொடி: முதலமைச்சர்

சென்னை, ஜன.13

சென்னைநத்தம்பாக்கத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழா 2025 தாய்த் தமிழ்நாட்டில் தமிழர் திருவிழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.

அயலகத் தமிழர் தினவிழாவில் கணியன்பூங்குன்றனார்விருதுகளை முதலமைச்சர் வழங்கினார். இதைத்தொடர்ந்து தமிழர்களின் பெருமையை விளக்கும் வகையில் வீடியோ உடன் பாடல் ஒளிபரப் பட்டது.

இதைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

★ உலகின் எந்த பகுதிக்கு போனாலும் தாய்த் தமிழ்நாட்டில் இருக்கும் உணர்வை அயலகத் தமிழர்கள் ஏற் படுத்தினர்.

★ அமெரிக்காவில் அயலகத்தமிழர்கள்எனக்குஅளித்த வரவேற்பை நான் என்றைக்கும் மறக்க முடியாது.

★ ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான் என எங்கு போனாலும் தாய் மண்ணில் உள்ள உணர்வை அயலகத் தமிழர்கள் ஏற்படுத் தினர்.

★ தமிழ்தான் நம்மை இணைக்கும் தொப்புள் கொடி. தாய் மண் தமிழ்நாட் டின் பொங்கல் விழாவில் உங்களை காணும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

★ பல்வேறு நாடுகளிலும் உழைப் பால் பாலைகளை சோலைகளாக மாற்றியவர்கள் தமிழர்கள்.



★ வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் நீங்கள் தமிழ்நாட்டை மறக்க வில்லை. தமிழ்நாடும் உங்களை மறக்காது.

★ 6 அயலக தமிழ் ஆளுமைகளுக்கு விருதுகளை இன்று வழங்கி சிறப்பித்துள்ளோம்.

★ அயலகங்களில் தமிழை வளர்க்கும் பல்வேறு திட் டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்துகிறது.

★ உலகம் முழுவதும் இன்னலுக்கு ஆளாகும் அயலக தமிழர்களை காத்து வருகிறது அயலக தமிழர் நலத் துறை.

★ வேர்களை தேடி என்ற திட்டம் எனது அரசியல் வாழ்க்கையில் மைல் கல்.

★ அல்லல்படுவோரின் கண்ணீரை துடைத்து, இன்னலுக்கு ஆளாவோரின் புன்னகையை மீட் டுள்ளோம் என்று பேசிய முதலமைச்சர் அயலக தமிழர்களுக்காக புதிய திட்டத்தை அறிவித்தார்.

## மெட்டாவின் கொள்கை மாற்ற விவகாரம்; 72 மணிநேர காலக்கெடு விதித்த பிரேசில்



பிரேசிலியா, ஜன.13

பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் உள்ளிட்ட வலைதளங்களை இயக்கி வரும் சமூக ஊடகங்களில் ஒன்றான மெட்டா நிறுவனம் சமீபத்தில் அதன் கொள்கையில் சில மாற்றங்கள் பற்றிய விவரங்களை வெளியிட்டது. இதுவரை மரபாக கடைப்பிடித்து வந்த உண்மை கண்டறியும் நடைமுறையில் இந்த மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன.

இதன்படி, தகவல்களை சரிபார்க்கும் திட்ட கொள்கை கைவிடப்படும் என்ற முடிவு அறிவிக்கப்பட்டது. இதனால், அதன் தளங்களில் வெறுப்பு பேச்சு மற்றும் தவறான தகவல் பரிவர்த்தனை பற்றிய விசயங்களில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட மரபுகள் கைவிடப்படுகின்றன என தெரிகிறது.

இந்த சூழலில், உண்மை கண்டறியும் நடைமுறையில் மரபாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கைகள் கைவிடப்படுவது பற்றி விளக்கம் அளிக்கும்படி கோரி மெட்டா நிறுவனத்திற்கு பிரேசில் அரசு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதற்காக 72 மணிநேர காலக்கெடுவும் விதித்துள்ளது.

இதுபற்றிய அறிவிப்பில், குழந்தைகள் மற்றும் முதியவர்கள், ஆபத்து சூழலிலுள்ள பாதுகாப்பற்ற மக்கள் மற்றும் வணிக சூழலை பாதுகாக்க கடுமையான சட்ட நடைமுறையை பிரேசில் கொண்டுள்ளது. டிஜிட்டல் படுகொலை மற்றும் காட்டுமிராண்டித்தனம் ஆகியவற்றால் இந்த சூழலை மாற்ற நாங்கள் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து உள்ளது.

இதேபோன்று, பிரேசில் நிதி மந்திரி பெர்னாண்டோ ஹத்தட்டின் ஏ.ஐ. வீடியோ ஒன்றை நீக்கும்படியும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. கடந்த காலங்களில், டிக்டாக் மற்றும் எக்ஸ் போன்ற வலைதளங்களுக்கு எதிராக தற்காலிக சேவை முடக்கம் என்ற சட்ட ரீதியிலான நடைமுறையை பிரேசில் எடுத்துள்ளது.

## காட்டுத்தீயில் சாம்பலான ரூ.219 கோடி மதிப்பிலான பங்களா; கோடிக்கணக்கில் ஜாக்பாட் வென்றவரின் சோகம்



லாஸ் ஏஞ்சல்ஸ், ஜன.13

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயால், பொதுமக்கள் பலரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். விலங்குகள் மற்றும் பறவைகளும் பாதிக்கப்பட்டு உள்ளன. 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புவாசிகள் வேறு இடங்களுக்கு செல்லும்படி உத்தரவிடப்பட்டு உள்ளனர்.

காட்டுத்தீயால் புகை மண்டலம் பரவி காணப்படுவதுடன், வெப்ப காற்றும் வீசி வருகிறது. இதனால், ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் எரிந்து சாம்பலாகி உள்ளன. இதுவரை காட்டுத்தீயில் சிக்கி 13 பேர் உயிரிழந்து உள்ளனர். இந்த காட்டுத்தீக்கு ஹாலிவுட் நடிகர், நடிகைகள் உள்ளிட்ட பிரபலங்கள் பலரின் வீடுகளும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன.

காட்டுத்தீயால் கலிபோர்னியாவில் பேரிடர் ஏற்பட்டு உள்ளது என ஜனாதிபதி பைடன் அறிவித்து உள்ளார். காட்டுத்தீயானது 15 ஆயிரம் ஏக்கர் வன பகுதிகள் வரை பரவி வருகிறது. இதுவரை 10 ஆயிரம் ஏக்கருக்கும் கூடுதலான பகுதிகள் எரிந்து விட்டன. ரூ.4.46 லட்சம் கோடி முதல் ரூ.4.89 லட்சம் கோடி வரையில் பொருளாதார இழப்பு ஏற்பட்டு உள்ளது என முதல்கட்ட ஆய்வில் மதிப்பிடப்பட்டு உள்ளது. தொடர்ந்து காட்டுத்தீ பரவி வரும் சூழலில், சேத மதிப்பு அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், அமெரிக்காவில் இதுவரை இல்லாத வகையில் லாட்டரியில் ஜாக்பாட் பரிசு தொகையை பெற்ற எட்வின் என்பவரின் பல கோடி மதிப்பிலான பங்களா எரிந்து போயுள்ளது. இதனால், அவர் சோகத்தில் ஆழ்ந்துள்ளார். உலக அளவில் பெரிய தொகையை லாட்டரியில் பரிசாக பெற்றவர் எட்வின் கேஸ்டிரோ. கடந்த 2022ம் ஆண்டு நவம்பரில், 2.04 பில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூ.16,590 கோடி) இவருக்கு பரிசாக கிடைத்தது.

இவற்றில் கடந்த ஆண்டு பிப்ரவரியில், 25.5 மில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூ.219.80 கோடி) அளவுக்கு, ஹாலிவுட் ஹில்ஸ் பகுதியில் அமைந்த தன்னுடைய ஆடம்பர பங்களாவுக்காக செலவிட்டார்.

ஆனால், சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர காட்டுத்தீயில் சிக்கி அவருடைய பங்களா எரிந்து சாம்பலானது என தி நியூயார்க் போஸ்ட் வெளியிட்ட செய்தி தெரிவிக்கின்றது. இதனால், வீட்டின் கான்கிரீட் தூண்கள் மற்றும் எரிந்து போன மரக்கட்டைகள் போன்றவையே மீதமுள்ளன. அவற்றின் புகைப்படங்களும் வெளியாகி உள்ளன.

ஹாலிவுட் பிரபலங்களான ஆடம் பிராடி, லெய்டன் மீஸ்டர், பெர்கீ, அன்னா பாரிஸ், அந்தோணி ஹாப்கின்ஸ் மற்றும் ஜான் குட்மேன் உள்ளிட்டோரும் அவர்களுடைய வீடுகளை இழந்துள்ளனர். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள லெய்டனின் ரூ.55.85 கோடி மதிப்பிலான வீடும் எரிந்து சேதமடைந்தது. அதுபற்றிய வீடியோ ஒன்றும் வெளியானது.

இதேபோன்று, பிரபல நடிகர்களான மார்க் ஹாமில், மாண்டி மூர் மற்றும் ஜேம்ஸ் உட்ஸ் உள்ளிட்டோரும் காட்டுத்தீயால் வீடுகளை விட்டு வெளியேறும் சூழலுக்கு தள்ளப்பட்டனர். பாலிசேட்ஸ் கடற்கரை பகுதியில் அமைந்த நடிகர் கேரி எல்விஸ் வீடும் தீயில் எரிந்து போனது. பிரபல மாடல், பாடகி மற்றும் நடிகையான பாரீஸ் ஹில்டனின் மாலிபு பகுதியில் உள்ள வீடும் எரிந்து சேதமடைந்து உள்ளது.

## பந்தலூர் கூவமூலா பழங்குடியினர் கிராமத்தில் பொங்கல் விழா

பந்தலூர், ஜன.13

பந்தலூர் கூவமூலா பழங்குடியினர் கிராமத்தில் பொங்கல் விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

ஆல் தி சில்ட்ரன், மகாத்மா காந்தி பொது சேவை மையம், நெல்லியாளம் நகராட்சி ஆகியன சார்பில் கூவமூலா பழங்குடியினர் கிராமத்தில் பொங்கல் விழா கொண்டாட்டம் நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு ஆல் தி சில்ட்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர். அஜித் தலைமை தாங்கினார். அம்பேத்கார் மக்கள் இயக்க செயலாளர் இந்திரஜித், நகராட்சி தூய்மை தூதுவர் சிந்துஜா, மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌசாத், நுகர்வோர் மைய நிர்வாகி ராஜா, பழங்குடியினர் பிரதிநிதி கேத்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



பொங்கல்கொண்டாட்டத்தைசமூக ஆர்வலர் காளிமுத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து இசை நாற்காலி, பலூன் உடைத்தல், உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பொங்கல் வைத்து பழங்குடியின முறைப்படி பூஜை செய்து மக்களுக்கு பொங்கல், கரும்பு, பழம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பழங்குடியினர் பலர் கலந்து கொண்டனர்.

## பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா



தேவகோட்டை, ஜன.13

தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் சமத்துவ பொங்கல் விழாநடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமையில் ஆசிரியர்கள் ,சத்துணவு ஊழியர்கள் சக்கரை பொங்கல், சாம்பார் சாதம் சமைத்து மாணவர்களுக்கு வழங்கினார்கள் .பொங்கல் கோலம் ,விளையாட்டு, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஶ்ரீதர், முத்து லெட்சுமி , முத்துமீனாள் ஆகியோர் செய்து இருந்தார்கள் . இந்நிகழ்வில் ஏராளமான பெற்றோர்களும் பங்கேற்றனர்.

## பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக புகார் குழு அமைக்க கலெக்டர் தகவல்

தென்காசி, ஜன.13

தென்காசி மாவட்டத்தில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் பணிபுரியும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக புகார் அளிக்க உள்ளக புகார் குழு அமைக்கப்பட வேண்டும். உள்ளக புகார் குழுவில் நான்கு உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். இக்குழுவின் தலைவராக நிறுவனத்தில் பணிபுரியும் மூத்த பெண் பணியாளரை நியமிக்க வேண்டும். உறுப்பினர்களாக பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் 2 பணியாளர்கள் மற்றும் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் அல்லது பாலியல் துன்புறுத்தல் பிரச்சினையை பற்றி தெரிந்த நபரினை நியமிக்க வேண்டும். இக்குழுவில் 50% பெண் உறுப்பினர்கள் கட்டாயம் இடம்பெற வேண்டும். உள்ளக புகார் குழு அமைக்கப்படாமல் இருந்தாலோ அல்லது புகார் அறிக்கையின் அடிப் படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தாலோ சம்பந்தபட்ட நிறுவனங்களின் உரிமம் அல்லது பதிவு ரத்து செய்யப்படும். இப்புகார் குழு அமைக்கபடாத பட்சத்தில் ரூ.50000/ வரை அபராதம் விதிக்கப்படும். மேலும், அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் 10 நபர்களுக்கு அதிகமாக பணிபுரியும் இடங்களில் உள்ளக புகார் குழு அமைக்கப்பட்டு அதன் விவரத்தினை . என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலகம் 140/5 சக்தி நகர், தென்காசி 627811 என்ற அஞ்சல் முகவரிக்கும் (25.01.2025) க்குள் அனுப்ப வேண்டும். தென்காசி மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் பாலியல் துன்புறுத்தல் குறித்து பெண்கள் அச்சமில்லாமல் புகாரளிக்க அச்சம் தவிர் என்ற தனித்துவமான மூலம் புகார் படிவம் உருவாக்கப் பட்டு உள்ளது. இது பெண்கள் தயக்கமில்லாமல் மற்றும் எவ்வித அச்சமில்லாமல் புகாரளிக்க மிகவும் உதவியாக இருக்கும் எனவும் புகார் அளிக்கும் பெண்கள் தங்களது சுய விவரங்கள் எதுவும் குறிப்பிடாமல் புகாரளிக்கலாம் என மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.




தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா யூனியன் சேர்மன் ஷேக் அப்துல்லா அவர்கள் தலைமையில் துணை சேர்மன் கனகராஜ் முத்துப்பாண்டியன் அவர்கள் முன்னிலையில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார் அலுவலக பணியாளர்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசு வழங்கி மதியம் விருந்து என கோலாகலமாக வெகு சிறப்பாக நடத்திய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கணேசன் அவர்கள் திரு.மாரியப்பன் அவர்கள் மேலாளர்கள் துணை மேலாளர்கள் உள்ளிட்ட அரசு பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள் அனைவருக்கும் எனது இனிய தமிழர் திருநாள் தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# பொங்கல் பரிசுத்தொகுப்பு 67 சதவீதம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது அமைச்சர் பெரிய கருப்பன் தகவல்

சென்னை, ஜன.14

அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தைப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்குத்தலாஒருகிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டிசேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். கடந்த 9ந் தேதி சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் பின்னமலைவேளச்சேரி பிரதான சாலையில் இயங்கிவரும் சைதாப்பேட்டை 11 நியாய விலைக்கடையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கி திட்டத்தினை தொடங்கி வைத்தார்.



இதன் மூலம், தமிழ் நாடு முழுவதும் 34,793 நியாய விலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல்பரிசுத்தொகுப்புவழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 50 ஆயிரம் கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, நேற்று வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 47 லட்சத்து 7 ஆயிரத்து 584 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல்பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 67 சதவீதம் பணிகள் நிறைவுபெற்றுள்ளது. மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் பிரைட் பீப்புள் சமுதாயக் கல்லூரியில் 10ம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா

திருத்துறைப்பூண்டி, ஜன.13

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பிரைட் பீப்புள் அறக்கட்டளைமற்றும் ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் ஆகியோர் சார்பில் பிரைட் பீப்புள்சமுதாயக்கல்லூரியில் பத்தாம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா மிகச் சிறப்பாக இனிதே நடைபெற்றது.ராய் டிரஸ்ட் நிறுவனத்தலைவர் முனைவர் துரை ராயப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொங்கல் தினமான தை 1 அன்று சூரியன் மற்றும் பூமியின்



சுற்றுவட்ட பாதை பற்றிய அறிவியல் உண்மைகளை பற்றியும் , நம் தமிழரின் பண்பாடு, கலாச்சாரம், நாகரீகத்தின் உச்சமாக விளங்க கூடிய தைத்திரு நாள் எப்படியெல்லாம் விளங்குகிறது என்பதை பற்றிய உண்மைகளை வாழ்த்துரையாக வழங்கினார், விழாவில் தமிழ் கலாச்சாரப் படி பொங்கலிட்டு சூரியனுக்கும் இயற்கைக்கும் நன்றி செலுத்தினர்.பிரைட் பீப்புள் அறக்கட்டளை நிறுவனர் பிரபாகரன் , சமுதாய பொங்கல் ஏன் கொண்டாட பட வேண்டும் என்பதை குறித்தும், பண்டைய கலாச்சாரத்தில் தமிழரின் சாதி மத மற்ற வாழ்க்கை பற்றியும் மாணவர்களுக்கு எடுத்து கூறி அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் செவிலியர் துறைத் தலைவர் நிர்மலா நன்றிக்கூறினார். கல்லூரி மாணவிகள் ஏராளமானோர் கலந்துக் கொண்டு பொங்கல் விழா கொண்டாடி சிறப்பித்தனர். சமுதாய பொங்கல் விழா இனிதே நிறைவு பெற்றது.

# நெல்லையப்பர் கோவில் யானை காந்திமதி சாவு

நெல்லை, ஜன.13

நெல்லை மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சிவன் கோவில்களில் நெல்லை டவுன் நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவிலும் ஒன்றாகும். இந்த கோவிலில் 56 வயதுடைய காந்திமதி என்ற பெண் யானை உள்ளது.

வயது முதிர்வு காரணமாக இந்த யானைக்கு கால்களில் மூட்டு வலி ஏற்பட்டு நடமாட முடியாமல் அவதிப்பட்டு வருகிறது. இதற்காக கடந்த 2020ம் ஆண்டு முதல் மருத்துவ குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். கடந்த சில நாட்களாக யானை கீழே படுத்து உறங்காமல் நின்றபடியே தூங்கிக் கொண்டிருந்தது.



நேற்று அதிகாலை 3 மணி அளவில் யானை திடீரென்று கீழே படுத்தது. ஆனால் அதன் பிறகு அதனால் எழுந்திருக்க முடியவில்லை.

யானையை மீண்டும் எழுந்து நிற்க வைக்க பாகன்கள் முயற்சி செய்தனர். ஆனால் அது கைகொடுக்கவில்லை. இதுகுறித்து பாகன்கள் இந்து சமய அறநிலையத்துறை உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் நெல்லை ஸ்ரீபுரம் கால்நடை மருத்துவமனை தலைமை டாக்டர் முருகன், நெல்லை வனகால்நடை டாக்டர் மனோகரன், மதுரை வன கால்நடை டாக்டர் கலைவாணன், நெல்லை ராமையன்பட்டி கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் செல்வமணிகண்டன், நெல்லை வனச்சரகர் சரவணகுமார் ஆகியோர் உடனடியாக கோவிலுக்கு வந்து யானையை பார்வையிட்டனர். இந்த மருத்துவ குழுவினர் யானையின் ரத்த மாதிரியை சேகரித்து பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

நேற்று மாலையில் 2 பெரிய கிரேன்கள் கோவிலுக்குள் கொண்டு வரப்பட்டன. அந்த கிரேன்கள் மூலம் யானையின் உடலில் பெல்ட் கட்டி தூக்கி நிறுத்தினார்கள்.

சிறிது நேரம் நின்றிருந்த யானை மீண்டும் கீழே படுத்துக்கொண்டது. யானைக்கு தொடர்ந்து மருத்துவ குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

இந்நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக நெல்லையப்பர் கோவில் யானை காந்திமதி உயிரிழந்தது.

யானையை எழ வைத்து சிகிச்சை அளிக்க மருத்துவர்கள் போராடிய நிலையில் சிகிச்சை பலனின்றி காந்திமதி யானை உயிரிழந்தது.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கு தயாராகும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள்

ஈரோடு, ஜன.13

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 237 வாக்குச்சாவடி மையங்களில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந்தேதி நடைபெற உள்ளது. இந்த வாக்குப்பதிவுக்கு 480 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

இதை முன்னிட்டு, வாக்குப்பதிவு எந்திரங்கள் முதல் நிலை சரிபார்க்கும் பணி பெங்களூரு பெல் நிறுவனத்தின் மூலம் கடந்த 6ந்தேதி முதல் ஈரோடு மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரகிடங்கில்நடைபெற்று வந்தது. இதில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள்முதல்கட்ட சரிபார்ப்பு பணி முடிவுற்ற பின்னர், இந்திய தேர்தல் ஆணையம் 5 சதவீதம் மாதிரி வாக்குப்பதிவு நடத்திட உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, முதல் கட்ட சரிபார்ப்பு பணி நேற்று முடிவடைந்ததை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவு நடந்தது. இந்த பணியை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.


மேலும் மாதிரி வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன், 19 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பயிற்சி நடத்துவதற்காக ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷிடம் ஒப்படைக்கப்பட உள்ளன.

இந்த ஆய்வின்போது, ஈரோடு ஆர்.டி.ஓ.ரவி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் முஹம்மது குதுரத்துல்லா, தேர்தல் பிரிவு தாசில்தார் சிவசங்கர் உள்பட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

# கிண்டியில் பொங்கல் அன்று குதிரை பந்தயம்

சென்னை, ஜன.13

கிண்டியில் நாளை (செவ்வாய்க்கிழமை) பொங்கல் அன்று 'டெர்பி' பந்தயம் நடக்கிறது.



ஒவ்வொரு வருடமும் பொங்கல் அன்று டெர்பி பந்தயம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இந்த பந்தயத்தில் மொத்தம் 9 குதிரைகள் கலந்து கொள்கின்றன. வெளிமாநிலங்களில் இருந்தும் இந்த பந்தயத்தில் குதிரைகள் கலந்து கொள்கிறது.

டெர்பி பந்தயத்தில் ஜெயிக்கும் குதிரையின் உரிமையாளருக்கு ரூ.70 லட்சத்து 35 ஆயிரம் பரிசுத்தொகை வழங்கப்படும். 2வது வரும் குதிரையின் உரிமையாளருக்கு ரூ.27 லட்சமும், 3வது வரும் குதிரையின் உரிமையாளருக்கு ரூ.11½ லட்சமும், 4வது வரும் குதிரையின் உரிமையாளருக்கு ரூ.6 லட்சமும் வழங்கப்படும்.

இரண்டு நாட்கள் நடைபெறும் முக்கிய பந்தயங்கள்:

1. டாஷ்மெஷ் ஸ்டெட் மில்லியன் ரூ.14½ லட்சம், 2. நனோலி ஸ்டெட் பில்லிஸ் கோப்பை ரூ.16½ லட்சம், 3. சென்னை ரேஸ் கிளப் கோப்பை ரூ.22 லட்சம். 4. பொங்கல் மில்லியன் கோப்பை ரூ.10½ லட்சம், 5. எம்.ஏ.எம்.ராமசாமி நினைவு கோப்பை ரூ.18 லட்சம். 6. உஷா ஸ்டெட் மில்லியன் கோப்பை ரூ.14½ லட்சம்.

இரண்டு நாட்கள் நடைபெறும் பந்தயத்தில் 14 ரேஸ்கள் நடைபெறுகிறது. எச் பி எஸ் எல் என்ற நிறுவனம் டெர்பி பந்தயத்திற்கு ஸ்பான்சர் செய்கிறது. இதன் உரிமையாளர் பிருத்வி ராஜி டெர்பி பந்தயத்தில் ஜெயிக்கும் உரிமையாளருக்கு கோப்பையை பரிசாக வழங்குவார்.

இந்த தகவலை ரேஸ் கிளப் செயலாளர் நிர்மல் பிரசாத் தெரிவித்தார். உடன்சீனியர்ஸ்டைபென்டிரி ஸ்டூவார்ட் வின்சன்ட் தன்ராஜ், உதவி ஸ்டைபென்டிரி ஸ்டுவார்ட் ஆர்.என். வி.பி. குமார் உடன் இருந்தனர்.

# பொங்கல் பண்டிகை கொண்டாட சென்னையில் இருந்து 12 லட்சம் பேர் சொந்த ஊருக்கு பயணம்

சென்னை, ஜன.13

கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட காரணங்களால் லட்சக்கணக்கான வெளியூர்வாசிகள் சென்னையில் வாழ்ந்து வருகிறார்கள். பொங்கல், தீபாவளி பண்டிகை காலங்களின்போது, சொந்த ஊர்களுக்கு சென்றுஅவர்கள்விழாவை சிறப்பித்து வருவது வழக்கம். மக்களின் பயன்பாட்டுக்காக விழாக்கால ங்களில் சிறப்பு பஸ்ரெயில்களும் இயக்கப்பட்டு வருகிறது.



இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை 14ந்தேதி கொண்டாடப்படுகிறது. அதனைத்தொடர்ந்து மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட இருக்கிறது. இதையொட்டி பொங்கல் பண்டிகையை சொந்த ஊருக்கு சென்று கொண்டாட சென்னைவாசிகள் விரும்பி, நேற்று முன்தினம் முதல் சென்னையில் இருந்து தங்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு சென்று வருகிறார்கள். இதனால் பஸ்ரெயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதி வருகிறது. பொங்கல் பண்டிகையையொட்டி, தினசரி இயக்கப்படும் பஸ்களுடன் சிறப்பு பஸ்கள் என மொத்தம் (10ந்தேதி முதல் 13ந்தேதி வரை) 21,904 பஸ்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன. இதில் கடந்த 2 நாட்களில் மட்டும் 7,309 பஸ்கள் புறப்பட்டு சென்றுள்ளன. இந்த பஸ்கள் மூலம் சுமார் 5 லட்சம் பேர் சாலை மார்க்கமாக வெளியூர்களுக்கு பயணித்துள்ளனர். சுமார் 200 ரெயில்களில் கடந்த 2 நாட்களில் சுமார் 3 லட்சம் பேர் பயணித்துள்ளனர். 50க்கும் மேற்பட்ட விமானங்களில் கடந்த 2 நாட்களில் மட்டும் சுமார் 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலானோர் சென்றுள்ளனர். அதேபோல ஆம்னி பஸ்கள், கார்கள் உள்ளிட்ட வாகனங்களின் மூலமாகவும் 3.5 லட்சம் பேர் வெளியூர்களுக்கு சென்றுள்ளனர். குறிப்பாக கடந்த 2 நாட்களில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கார்கள் புறப்பட்டு சென்றுள்ளன. அந்த வகையில் கடந்த 2 நாட்களில் சென்னையில் இருந்து 12 லட்சம் பேர் பொங்கல் பண்டிகை கொண்டாட சொந்த ஊருக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். இன்றும், நாளையும் 4,184 தினசரி பஸ்களுடன், 2,611 சிறப்பு பஸ்கள் என 6,175 பஸ்கள் சென்னையில் இருந்து இயக்கப்படுகின்றன. அதேபோல வெளியூர்களில் இருந்து சென்னைக்கு 4,390 பஸ்கள் இயக்கப்படுகின்றன. வழக்கத்தை காட்டிலும் இந்தாண்டு வெளியூர் சென்ற கார்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் பஸ்ரெயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதி வருகின்றன. குறிப்பாக தென்மாவட்டங்களுக்கு செல்லும் ரெயில்களில் முன்பதிவில்லா பெட்டிகளில் உட்கார கூட இடமின்றி கூட்டம் காணப்படுகிறது. ஒவ்வொரு ரெயிலிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

# பொங்கல் அன்று வண்டலூர் உயிரியல் பூங்கா செயல்படும்

சென்னை, ஜன.13

வண்டலூர் உயிரியல் பூங்கா நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பொங்கல் விடுமுறையின் போது பார்வையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுவாரஸ்ய அனுபவத்தை உறுதி செய்வதற்காக, உயிரியல் பூங்கா நிர்வாகம் மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூங்கா (செவ்வாய்கிழமை) செயல்படும். 14.01.2025 பார்வையாளர்கள் ஆன்லைன் தளங்கள் (UPI, WhatsApp) மற்றும் டிக்கெட் கவுன்டர்கள் மூலம் டிக்கெட்டுகளை வாங்கலாம். மேலும் பொதுமக்களின் வசதிக்காக சில கேஷ் கவுண்டர்கள் திறக்கப்படும்.

உயிரியல்பூங்காவிற்குள் இரு சக்கர வாகனங்களுக்கும், 500 மீட்டர் தொலைவில் கேளம்பாக்கம் சாலையில் ஆட்டோ, கார், வேன், கனரக வாகனங்கள் நிறுத்துவதற்கும் பார்க்கிங் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

வாகன நிறுத்துமிடத்திலிருந்து நுழைவாயிலுக்கு பார்வையாளர்களை ஏற்றிச் செல்ல இலவச வாகன வசதி சேவை செய்யப்பட்டுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோரின் தொடர்பு எண்ணைக் குறிப்பிடும் கைவளையம் வழங்கப்படும்.

பார்வையாளர்கள் பிளாஸ்டிக் நிரம்பிய உணவுப் பொருட்களையோ பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்களையோ கொண்டு வர வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மதுபானம் மற்றும் ஆயுதங்கள் போன்ற பொருட்கள் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளன. இந்த பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட பூங்கா நிர்வாகம் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது என தெரிவித்துள்ளது.

# இலங்கை கடற்படையால் 8 தமிழக மீனவர்கள் கைது

மண்டபம், ஜன.13

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம், மண்டபம், தங்கச்சிமடம், பாம்பன்உள்ளிட்டபகுதிகளில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தொடர் அச்சுறுத்தல்களால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.

குறிப்பாக எல்லை தாண்டி வந்ததாக கூறி நடுக்கடலில் வைத்து அவர்களை சிறைபிடிப்பது, படகுகளை பறிமுதல் செய்தல், தாக்கி விரட்டி அடித்தல், வலைகளை அறுத்து சேதப்படுத்துதல் உள்ளிட்டவைகளால் நஷ்டத்தையும் சந்திக்கின்றனர்.

புத்தாண்டு பிறந்தது முதல் இயற்கை சீற்றம், கடலுக்கு செல்ல தடை உள்ளிட்ட காரணங்களால் மீன்பிடி வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்தநிலையில் அனைத்து தடைகளும் விலகிய நிலையில் நேற்று காலை மீன்துறை அலுவலக அனுமதியுடன் 350க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 1,500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க சென்றனர்.

அவர்களில் பெரும்பாலானோர் கச்சத்தீவு, நெடுந்தீவு அருகே பாரம்பரிய பகுதியில் வலைகளை விரித்து மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர். அப்போது அங்கு மின்னல் வேகத்தில் வந்த இலங்கை கடற்படையினரை பார்த்து பல மீனவர்கள் வலைகளை சுருட்டிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர். இருந்தபோதிலும் ராமேசுவரத்தை சேர்ந்த முகேஸ் குமார், மரிய ரெட்ரிசன் ஆகியோருக்கு சொந்தமான 2 விசைப்படகுளை இலங்கை கடற்படையினர் சுற்றி வளைத்தனர்.

மீனவர்களின் படகுகளுக்குள் தாவிக்குதித்த அவர்கள் படகில் பிடித்து வைத்திருந்த மீன்கள், ஜி.பி.எஸ்.

கருவி மற்றும் மீன்பிடி உபகரணங்களை பறித்துக்கொண்டனர். பின்னர் எல்லை தாண்டி வந்ததாக கூறி களஞ்சியம் (வயது 47), முனீஸ்வரன் (49), கார்மேகம் (60), கண்ணன் (43), தங்கச்சிமடத்தை சேர்ந்த பிரிஸ்மன் (25), பிரியன் (30), மரிய ஜான் ரெமோரா(48), சவேரியார் அடிமை (48) ஆகிய 8 மீனவர்களையும் சிறைபிடித்து, அவர்களின் 2 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்து இலங்கைக்கு கொண்டு சென்றனர்.

பின்னர்அவர்களைகாங்கேசன்துறைமுக அலுவலகத்திற்கு கொண்டு சென்று இலங்கை கடற்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இன்று விடுமுறை நாள் என்பதால் நாளை அவர்கள் ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுகிறார்கள். அதன்பின்னரே அவர்கள் விடுதலை ஆவார்களா? அல்லது சிறையில் அடைக்கப்படுவார்களா? என்பது தெரியவரும்.

ஏற்கனவே கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாள் 17 மீனவர்கள் 2 படகுகளுடன் சிறைபிடிக்கப்பட்டனர். தற்போது பொங்கல் பண்டிகை கொண்டாட இருந்த நிலையில் 8 மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் ராமேசுவரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பொங்கலையொட்டி போக்குவரத்து ஊழியர்களுக்கு ரூ.6.41 கோடி ஊக்கத்தொகை

சென்னை, ஜன.13

அரசு போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமை செயலாளர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன. குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்குதடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப்பணிக்குழு ஆகிய அனைத்து நிறுவனங்களிலும் தற்போது சுமார் ஒரு லட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகியவற்றில் பணிபுரியும், போக்குவரத்து கழகங்களின் பணியாளர்களில், 2024ம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 151 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும், 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 200 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் "சாதனை ஊக்கத்தொகை" வழங்கப்படும். இந்த உத்தரவின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 105 போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் 6 கோடியே 41 லட்சத்து 18 ஆயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கோவிலுக்கு பாதயாத்திரை பக்தர்கள் வருகை அதிகரிப்பு



திருச்செந்தூர், ஜன.13

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நெல்லை, தூத்து க்குடி, தென்காசி, ராஜபாளையம் பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் ஆண்டு தோறும் பொங்கல்திருநாளைமுன்னிட்டு பொங்கலுக்கு முன்பாக பாதயாத்திரையாக வந்து அலகு குத்தியும், காவடி எடுத்து வந்தும் சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம். சில பக்தர்கள் சர்ப்பகாவடி எடுத்து வந்து வழிபாடு செய்வர். தற்போதுசர்ப்பகாவடிஎடுக்க தடை விதிக்கப்பட்டு ள்ளது. மேலும் தமிழகம் மட்டுமல்லாது கேரளா, கர்நாடகா, ஆந்திரா, போன்ற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் பொங்கல் திருநாளை முன்னிட்டு வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். மேலும் ஏராளமான பக்தர்கள் தைப்பூசம் வரை பாதயாத்திரையாக வந்து சாமி தரிசனம் செய்வார்கள். தற்போது பொங்கல் திருநாள் நெருங்குவதால் பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளது. இதனால் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. பக்தர்கள் கடல் மற்றும் நாழி கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 4 மணிநேரம் காத்திருந்து சாமிதரிசனம் செய்து செல்கின்றனர்.

# பொங்கல் தொடர் விடுமுறை எதிரொலி உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் போக்குவரத்து நெரிசல்



கள்ளக்குறிச்சி, ஜன.13

பொங்கல் பண்டிகை தமிழ்நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், பொங்கல் பண்டிகைக்கு தங்களுடைய சொந்த ஊர்களுக்கு சென்று குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டாட வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

பொங்கல் பண்டிகையையொட்டி வருகிற 14 ந்தேதி முதல் 19ந்தேதி வரை 6 நாட்கள் அரசு விடுமுறை அறிவித்துள்ளது. வருகிற 13ந்தேதி (திங்கட்கிழமை) ஒரு நாள் விடுப்பு எடுத்தால் அதற்கு முந்தைய நாட்களான 11, 12ந்தேதிகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள் ஆகும். அதன்படி அரசு ஊழியர்களுக்கு பொங்கல் பண்டிகைக்கு 9 நாட்கள் விடுமுறை கிடைத்து விடும்.

இதனால், விடுமுறை இன்று முதல் தொடங்குவதால் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு செல்வோர் நேற்றே படையெடுத்துள்ளனர். இதனால், சென்னையின் முக்கிய சாலைகளான கிண்டி, தாம்பரம், கூடுவாஞ்சேரி, போரூர் ஆகிய பகுதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு தென் மாவட்டங்களுக்கு படையெடுக்கும் வாகனங்களால் உளுந்தூர்பேட்டைசுங்கச்சாவடியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் பல மணி நேரமாக காத்திருந்து மெதுவாக ஊர்ந்து செல்கின்றன.

# போதை பொருட்கள் விற்பனை: சர்வதேச கடத்தல் கும்பலுடன் தொடர்புடைய 3 மாணவர்கள் உட்பட 4 பேர் கைது



திருச்சி, ஜன.13

திருச்சி வயலூர் ரோட்டில் இளைஞர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மெத்தபெட்டமைன் எனும் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக உறையூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. உடனடியாக உறையூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமானுஜம் மற்றும் போலீசார் சம்பவ இடம் விரைந்து சென்றனர்.

பின்னர் போதை பொருள் விற்பனை கும்பலை சுற்றி வளைத்து பிடித்தனர். இதில் 4 பேர் பிடிபட்டனர்.

விசாரணையில் பிடிபட்டவர்கள் திருச்சி கனரா பேங்க் காலனி சீனிவாச நகர் பகுதியைச் சேர்ந்த பூஜித் (வயது 24), ஈரோடு டீச்சர்ஸ் காலனி பகுதியை சேர்ந்த ஆல்வின்(23).

இவர் திருச்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் எம்எஸ்சி படித்து வருகிறார்.

திருச்சி ராஜா காலனி பகுதியை சேர்ந்தவர் நகுல் தேவ் (21). இவரும் திருச்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பிஎஸ்சி 2ம் ஆண்டு படித்து வருகிறார்.

கே.கே. நகர் பகுதியைச் சேர்ந்தவர் கல்லூரி மாணவர் நவீன் ஆகியோர் என்பது தெரியவந்தது. இவர்கள் 4 பேரையும் போலீசார் கைது செய்து ரூ.1லட்சம் மதிப்பிலான போதைப் பொருள் பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர்.

பின்னர் ரகசிய இடத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இதில் பல்வேறு அதிர்ச்சி தகவல்கள் கிடைத்தது.

கைதான போதைப்பொருள்விற்பனைகும்பலுக்கு சர்வதேசபோதைபொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இந்த கடத்தல் கும்பலுக்கு தலைவனாக சிங்கப்பூரைச் சேர்ந்த ஒருவர் செயல்பட்டு வருகிறார்.

மேலும் கடத்தலுக்கு கோவையை சேர்ந்த ஒருவர் ஏஜென்டாக செயல்பட்டதும் தெரியவந்தது.

இவர்கள் 2 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து தேடி வருகின்றனர். மேற்கண்ட போதைப் பொருள் ஆப்கானிஸ்தானில் இருந்து கப்பல்கள் மற்றும் படகுகள் மூலமாக இந்தியாவுக்குள் கடத்தி வரப்பட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சப்ளை செய்யப்படுவதாக கூறப்பட்டது.

கைதான இந்த நபர்கள் பெங்களூரில் இருந்து இந்த போதை பொருளை வாங்கி வந்து திருச்சி மாநகரில் விற்பனை செய்துள்ளனர்.

# திமுக அரசின் மக்கள் விரோத அணுகுமுறையை கண்டித்து வரும் 20ந்தேதி பாஜக போராட்டம் அண்ணாமலை



சென்னை, ஜன.13

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பிரதமர் மோடி அவர்கள், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கி, நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் சிறப்பான செயல்பாடுகளை மேற்கொண்டிருக்கையில், இங்குள்ள திமுக அரசு, தமிழகத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்கிறது.

மதுரை, தூத்துக்குடி இடையே, அருப்புக்கோட்டை வழியாக புதிய ரெயில் பாதை அமைக்கும் திட்டம் திமுக அரசின் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளதை, ரெயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் நேற்று ஊடகங்களில் தெளிவுபடுத்தினார்.

தமிழகத்தின் பல்வேறு ரெயில் திட்டங்களுக்குத் தேவையான 3,389 ஹெக்டேர் நிலத்தில், வெறும் 26% நிலம் மட்டுமே, திமுக அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளதை, சமீபத்தில் நமது ரெயில்வே அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்.

அருப்புக்கோட்டை வழியாகச் செல்லும் மதுரைதூத்துக்குடி புதிய ரெயில் பாதைக்கு, சுமார் 870.98 ஹெக்டேர் நிலம் தேவைப்பட்டது, ஆனால் தமிழக அரசு வெறும் 74.87ஹெக்டேர்நிலத்தை மட்டுமே கையகப்படுத்தியுள்ளது. திமுக அரசின் நத்தை வேகச் செயல்பாடு, இப்போது அருப்புக்கோட்டை மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் தடையாக மாறியுள்ளது.

திமுக அரசின் இந்த மக்கள் விரோத அணுகுமுறையை, தமிழக பாஜக சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறோம். வரும் ஜனவரி 20ந்தேதி அன்று, அருப்புக்கோட்டை நகரில், புதிய ரெயில் பாதையை ரத்து செய்த திமுக அரசின் முடிவுக்கு எதிராக, விருதுநகர் மாவட்ட மக்களுடன் இணைந்து, மாபெரும் போராட்டம் நடத்தவிருக்கிறோம்.

இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# தமிழக சட்டசபை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு



சென்னை, ஜன.13

தமிழக சட்டசபையின் இந்த ஆண்டிற்கான முதல் கூட்டம் கடந்த 6ந்தேதி (திங்கட்கிழமை) தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டும் தமிழக சட்டசபையின் முதல் கூட்டத்தில் ஆளுநர் உரை நிகழ்த்துவது மரபாக இருந்து வருகிறது.

அந்த வகையில் சட்டசபையின் நடப்பாண்டு முதல் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக சட்டசபைக்குள் நுழைந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, தேசிய கீதத்திற்கு அவமானம் ஏற்பட்டதாக கூறி உரையாற்றாமல் அவையில் இருந்து வெளியேறிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சட்டசபையில் உரையாற்றாமல் ஆளுநர் ஆர்.என். ரவி புறப்பட்ட நிலையில் ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை சபாநாயகர் அப்பாவு வாசித்தார்.

இதைத்தொடர்ந்து சட்டசபை முன்னாள் உறுப்பினர் மறைவுகுறித்து இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. மறைந்த ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவுக்கும், முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் மறைவுக்கும் இரங்கல் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டது.

சட்டசபையில் வினாக்கள்விடைகள் நேரத்தில் சட்டசபை உறுப்பினர்கள் கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்தனர்.

பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை மற்றும் தண்டனையை அதிகரிக்கும் 2 சட்டமசோதாக்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் நேற்று தாக்கல் செய்திருந்தார். இந்த சட்டமசோதாக்கள் மீது சட்டசபையில் இன்று எம்.எல்.ஏ.க்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த சட்டமுன்வடிவு இன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் தமிழக சட்டசபையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார்.

# புழல் சிறையில் காவலர்கள் மீது தாக்குதல் 2 பேர் மருத்துவமனையில் அனுமதி




சென்னை, ஜன.13

சென்னை புழல் சிறையில் பயங்கரவாதிகள் பன்னா இஸ்மாயில், பிலால் மாலிக் அடைக்கப்பட்டு இருந்த அறையில் இருந்து காவலர்கள் செல்போன், சார்ஜரை பறிமுதல் செய்தனர். இதையடுத்து இன்று மீண்டும் சோதனை செய்ய முயன்றபோது காவலர்கள் மீது கைதிகள் தாக்குதல் நடத்தினர்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் தாக்கியதில் சிறைக்காவலர்கள் இருவர் காயம் அடைந்தனர்.

காயமடைந்த சிறைக்காவலர்கள் மணிகண்டன், சாந்தகுமார் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சிறையில் கைதிகள் காவலர்களை தாக்கிய சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

# ஏற்காட்டில் வரலாறு காணாத குளிர்: சளி, காய்ச்சலால் அவதிப்படும் பொதுமக்கள்



ஏற்காடு, ஜன.13

சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை அதிகஅளவில் பெய்தது. இதன் காரணமாக தற்போது அணை, ஏரி, குளங்கள் மற்றும் கிணறுகளில் தண்ணீர் அதிகளவில் தேங்கி நிற்கிறது.

இந்த நிலையில் மார்கழி மாதம் தொடக்கத்தில் இருந்தே சேலம் மாவட்டத்தில் பனி, குளிரின் தாக்கம் அதிகளவில் இருந்து வருகிறது. குறிப்பாக சுற்றுலா தலமான ஏற்காட்டில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுங்குளிர், பனிப்பொழிவு ஏற்பட்டு வருகிறது. தினமும் மாலை 3 மணிக்கு தொடங்கும் குளிர், பனி மறுநாள் காலை 11 மணி வரை நீடிப்பதால் அந்த நேரத்தில் பொதுமக்கள்வீடுகளிலேயே முடங்கி உள்ளனர். இதனால் சாலைகள் வெறிச்சோடி காணப்படுகிறது. தொடர்ந்து பனி, குளிரின் தாக்கத்தால் பொதுமக்கள் சளி, காய்ச்சல், இரும்பலால் அவதிப்பட்டு வருகிறார்கள். இதனால் அரசு ஆஸ்பத்திரிகளில் புறநோயாளிகள் கூட்டம் அலைமோதி வருகிறது. குறிப்பாக வயதானவர்கள் இந்த குளிரால் கடுமையாக அவதிப்பட்டு வருகிறார்கள்.

பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்பவர்கள் கம்பளி ஆடைகளை அணிந்து செல்கிறார்கள். மேலும் பனியின் தாக்கம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைந்து காணப்படுகிறது.

இன்று காலையும் கடுமையான பனிப்பொழிவு நிலவியது. இதனால் காலை நேரத்தில் குளிரில் இருந்து தப்பிக்க சிலர் சாலையோரங்களில் தீமூட்டி குளிர் காய்ந்தனர்.

மேலும் மலைப்பாதையில் சென்று வந்த வாகனங்கள் அனைத்தும் முகப்பு விளக்கை ஒளிரவிட்டப்படி வந்துசெல்கின்றன. மேலும் கடுமையான பனிமூட்டம் நிலவியதால் வாகனங்கள் மெதுவாக இயக்கப்பட்டது.

குடியிருப்புகள் மற்றும் சுற்றுலாதலங்களை பனி மூடி மறைத்துள்ளது. எதிரில் யார் நிற்கிறார்கள் என்று தெரியாத அளவுக்கு பனியின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

இதே போல் சேலம் மாவட்டத்தில் உள்ள மற்ற சமவெளி பகுதிகளிலும் குளிரின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் காலை நேரத்தில் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் கம்பளி ஆடைகள், குல்லா அணிந்து சென்றனர்.

# 42 மாத கால தி.மு.க. ஆட்சி தமிழகத்தின் இருண்ட காலம் ஓ.பன்னீர்செல்வம் தாக்கு



சென்னை, ஜன.13

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டை விடியலை நோக்கி அழைத்துச் சொல்கிறோம் என்றுகூறி ஆட்சிக்கு வந்த தி.மு.க., தமிழ்நாட்டை அழிவுப் பாதைக்கு அழைத்துச்சென்றுகொண்டிருக்கிறது. கடந்த 42 மாத காலம் தமிழ்நாட்டின் இருண்ட காலம் என்று சொல்லும் அளவுக்கு ஒரு மோசமான ஆட்சியாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் செல்கிறது என்றால், அந்த நாட்டில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும், மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு இளைஞர்கள் அறிவுத் திறன் உயர்த்தப்பட வேண்டும், அரசுப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டும், விலைவாசி கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், இவையெல்லாம் கடந்த 42 மாத கால தி.மு.க. ஆட்சியில் நடைபெறவில்லை. மாறாக, போதைப் பொருட்களின் புகலிடமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# திருவள்ளுவர் சிலை கண்ணாடி பாலம் கைப்பிடி சுவர் சேதம்



கன்னியாகுமரி, ஜன.13

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அதன் அருகில் உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் எழுப்பப்பட்டுள்ளது. இவற்றை இணைக்கும் வகையில் ரூ.37 கோடி செலவில் கண்ணாடி இழை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தை கடந்த டிசம்பர் மாதம் 30ந்தேதி திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதைத்தொடர்ந்து கடந்த 4ந்தேதி முதல் கண்ணாடி பாலம் வழியாக சுற்றுலா பயணிகள் நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். இதுவரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் கண்ணாடி பாலத்தை பார்வையிட்டு உள்ளனர்.

இந்த நிலையில் இன்று இந்த கண்ணாடி பாலத்தின் பக்கவாட்டில் அமைந்துள்ள கைப்பிடி சுவரில் "திடீர்" என்று சேதம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு பராமரிப்பு பணிகள் நடைபெறுகிறது. இதையொட்டி இன்று காலை 8 மணிக்கு வழக்கம் போல் விவேகானந்தர் மண்டபத்துக்கு படகு போக்குவரத்து தொடங்கிய பிறகும் கண்ணாடி பாலம் வழியாக சுற்றுலா பயணிகள் திருவள்ளுவர் சிலையை பார்வையிட செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதனால் சுற்றுலா பயணிகள் கண்ணாடி பாலத்தை பார்வையிட முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# பொங்கல் பண்டிகை எதிரொலி விமான கட்டணம் பன்மடங்கு உயர்வு

சென்னை, ஜன.13

பொங்கல் பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்கு செல்ல வசதியாக பொங்கலுடன் இணைந்த 3 நாட்கள் விடுமுறை மட்டுமின்றி ஜனவரி 17ந்தேதியும் (வெள்ளிக்கிழமை) அரசு விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. இதனால் ஆறு நாட்கள் தொடர் விடுமுறை கிடைக்கிறது.

பண்டிகையை ஒட்டி தொடர் விடுமுறை கிடைப்பதால் வெளியூர் செல்லக்கூடியவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இந்நிலையில் பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு டெல்லி, மும்பை, ஐதராபாத், சென்னை போன்ற முக்கிய நகரங்களுக்கு இடையே இயக்கப்படும் விமானங்களின் கட்டணம் 6 மடங்கு அளவிற்கு அதிகரித்துள்ளது.

சென்னையில் இருந்து ஏராளமானோர் மதுரை, சேலம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு செல்வர். இதனால், சென்னை மதுரை இடையே விமான கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளது.

சென்னையில் இருந்து மதுரைக்கு வழக்கமான விமானகட்டணம் ரூ.3,999 ல் இருந்து ரூ.17,645ஆக உயர்ந்துள்ளது.

# அடுத்த மாதம் 1ந்தேதி முதல் ஆட்டோ சவாரிக்கு புதிய கட்டணம்



சென்னை, ஜன.13

ஆட்டோ டிரைவர்கள் கூட்டமைப்பு சங்கங்களில் உள்ள உரிமை குரல் ஓட்டுனர் தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் டி.ஏ.ஜாஹூர் ஹூசைன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆட்டோ மீட்டர் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக உரிமை குரல் ஓட்டுனர் தொழிற்சங்கம் மற்றும் பல்வேறு ஆட்டோ ஓட்டுனர் சங்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியும், போக்குவரத்து துறை ஆணையர், உள்துறை செயலாளர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என அனைவரிடமும் கோரிக்கைகளை வைத்தும் ஆட்டோ மீட்டர் கட்டணம் மாற்றி அமைக்கப் படவில்லை.

வீட்டு வாடகை, வாகனங்களின் உதிரி பாகங்களின் விலை உயர்வு, இன்சூரன்ஸ் கட்டணம் உயர்வு, ஆர்.டி.ஓ. கட்டணங்கள் போன்ற விலைவாசி உயர்வுகளை சமாளிக்க முடியாமல், பயணிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் நிலைக்கு ஆட்டோ டிரைவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.


எனவே இதனை சரி செய்து பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கிட அனைத்து ஆட்டோ ஓட்டுனர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக தமிழ்நாடு அரசு ஆட்டோ மீட்டர் கட்டணத்தை மாற்றி அமைக்கும் வரை புதிய கட்டணத்தில் ஆட்டோவை இயக்க முடிவு செய்திருக்கிறோம்.

அதன்படி, முதல் 1.8 கி.மீ.க்கு ரூ.50, கூடுதல் கி.மீ.க்கு ரூ.18, காத்திருப்பு கட்டணமாக நிமிடத்துக்கு 1 ரூபாய் 50 காசு, இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை 50 சதவீதம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும். அடுத்த மாதம் (பிப்ரவரி) 1ந்தேதி முதல் இந்த புதிய கட்டணத்தில் ஆட்டோக்களை இயக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே 1.8 கி.மீ.க்கு ரூ.25, கூடுதல் கி.மீ.க்கு ரூ.12 என்று ஆட்டோ கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

# எடப்பாடி பழனிசாமி உறவினர் வீட்டில் 5வது நாளாக வருமான வரித்துறை சோதனை



ஈரோடு, ஜன.13

ஈரோடு பூந்துறைரோடு செட்டிபாளையம்ஸ்டேட் வங்கி நகரில், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் உறவினரான என்.ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமான என்.ஆர்.கட்டுமான நிறுவன அலுவலகம் செயல்படுகிறது.

இங்கு கடந்த 7ந் தேதி முதல் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதேபோல் அவல்பூந்துறையில் உள்ள அவரது வீடு, அம்மாபேட்டையில் உள்ள மரவள்ளி கிழங்கு அரவை ஆலை ஆகிய இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது.

இந்நிலையில் என்.ஆர். கட்டுமான நிறுவனத்தில் 5வது நாளாக வருமான வரித்துறை சோதனை நடைபெற்று வருகிறது. கட்டுமான நிறுவனம், வேலங்காட்டுவலசில் உள்ள வீடு உள்ளிட்ட பகுதிகளில் 72 மணி நேரத்திற்கு மேலாக சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

ரகுநாயக்கன்பாளையத்தில் ஆர்.பி.பி. கட்டுமான நிறுவன உரிமையாளர் செல்வ சுந்தரம் தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது.

ஈரோடு முள்ளாம்பரப்பில் உள்ள கட்டுமான அலுவலகத்திலும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

# அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்ற சமத்துவ பொங்கல் விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு: கலெக்டர் வழங்கினார்



நெல்லை, ஜன.13

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு கலைநிகழ்ச்சிகள், பாரம்பரிய விளையாட்டு போட்டிகளுடன் அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்ற சமத்துவ பொங்கல் விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நை.சிலம்பரசன், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா. துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர்வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், கிறித்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியாளர் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் விஜிலா சத்தியானந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாவட்ட கலெக்டர் வளாகம் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, கரும்பு, மஞ்சள் போன்ற தோரணங்கள் கட்டப்பட்டு தமிழர் திருநாளான பொங்கல் திருநாளைமுன்னிட்டு கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளுடன் 40க்கும் மேற்பட்ட துறைகள் ஒருங்கிணைந்து 13 பானைகளில் பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது. அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்ற சமத்துவ பொங்கல் விழாவில் கோலப்போட்டி, ஒயிலாட்டம், பண் மற்றும் மூறுக்கு சாப்பிடும் போட்டி, கயிறு இழுத்தல், இளவட்டக்கல் தூக்குதல், உரி அடித்தல், மியுசிக்கள் சேர், லக்கி கார்னர், ஸ்லோ சைக்கிள் ரேஸ், ஊசியில் நூல் கோர்த்தல், பலூன் உடைத்தல் போன்ற போட்டிகளில் அரசு துறை சார்ந்த ஆண் மற்றும் பெண் அலுவலர்களும், திருநங்கையர்களும் ஆர்வமுடன் பங்கேற்றார்கள். பொங்கல் சுவை மற்றும் பாரம்பரிய முறையில் சிறப்பாக பொங்கல் ஏற்பாடுகள் செய்த குழுக்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகளை மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், வழங்கி பாராட்டினார்கள்.

பெண் அலுவலர்கள் இளவட்டக்கல் தூக்கும் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, மாவட்ட கலெக்டர் பங்கேற்ற உரி அடித்தல் போட்டி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பங்கேற்ற இளவட்டக்கல் தூக்குதல் போட்டி போன்ற போட்டிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. பள்ளி மற்றும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் வரவேற்பு நடனம், பொங்கல் பாடல்கள், வில்லு பாட்டு, கிராமிய நடனம், போன்ற கலை நிகழ்ச்சிகளுடன் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

# வேளாளர் கல்வி நிறுவனங்களின் சார்பில் கல்லூரி மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சியுடன் பொங்கல் விழா



ஈரோடு, ஜன.13

வேளாளர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியின் பொங்கல் கொண்டாட்டம் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியின் 25. ஆம் ஆண்டின் தொடக்கத்தை முன்னிட்டு தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையாள பொங்கல் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழா காலை 9.00 மணிக்கு தொடங்கி, தமிழர்களின் பாரம்பரிய கலையான மயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், மான் கொம்பு ஆட்டம், காவடி ஆட்டம், ஒயிலாட்டம், கட்டைக்கால் ஆட்டம், பறையாட்டம், கரகாட்டம், மாடு ஆட்டம், புலி ஆட்டம், சிலம்பாட்டம், சாட்டை குச்சி ஆட்டம் மற்றும் பெரிய கம்பு ஆட்டம் போன்றவை ஒன்றன் பின் ஒன்றாக மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பொது பொங்கல் வைத்தல் மற்றும் பொங்கல் வைத்தல் போட்டி நடைபெற்றது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்னும் விவசாயிகளின் நம்பிக்கைக்கு ஏற்ப இத்தை மாதத்தின் பிறப்பை முன்னிட்டும் கல்லூரியின் 25 ஆம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டும் கல்லூரி மாணவிகள் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் சந்திரசேகர், தலைவர் .ஜெயக்குமார், தலைமையில் இப்பொங்கல் விழாவினை மிகவும் மகிழ்ச்சியாக பொங்கல் வைத்து கொண்டாடினார்கள். மேலும் தமிழர்களின் பாரம்பரியமான வள்ளி கும்மியாட்டம், பெருஞ்சலங்கை ஆட்டம், கும்மி அடித்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதன் பின் உசியடித்தல், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் மாணவ மாணவிகள் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டார்கள். வேளாளர் கல்வி நிறுவனங்களின் அறக்கட்டளை உறுப்பினர்களான திரு.. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு.. யுவராஜா அவர்களும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி விழாவை சிறப்பித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் .ஜெயராமன் அவர்கள் முன்னிலையில், விழா ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் .ஈஸ்வரமூர்த்தி, மற்றும் முனைவர் .சந்திரசேகர் அவர்கள், விழாவை ஏற்பாடு செய்தனர். கல்லூரி நிர்வாக மேலாளர் பெரியசாமி அவர்கள் இவ்விழாவை ஏற்பாடு செய்ய பெரிதும் உறுதுணையாக இருந்தார்.

# ஜெய் நடித்துள்ள பேபி & பேபி படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் வெளியீடு




கடந்த ஆண்டு நடிகர் ஜெய் நடிப்பில் தீரா காதல் மற்றும் பார்ட்டி ஆகிய இரண்டு திரைப்படங்கள் வெளிவந்தன . நடிகர் ஜெய் அடுத்து நடித்துள்ள திரைப்படம் பேபி& பேபி. இத்திரைப்படத்தை பிரதாப் இயக்கியுள்ளார்.

இப்படத்தில் ஜெய்யுடன், யோகி பாபு, சத்யராஜ், கீர்த்தனா, சாஇ தன்யா, பிரக்யா நக்ரா, இளவரசு, ஸ்ரீமன், ஆனந்த்ராஜ், ரெடின் கிங்ஸ்லி, நிழல்கள் ரவி, சிங்கம்புலி, தங்கதுரை, ராமர், ராஜேந்திரன், சேஷு, பிரத்தோஷ் மற்றும் பலர் என நகைச்சுவை நடிகர்களின் பட்டாளமே இப்படத்தில் நடித்துள்ளது.

இப்படத்திற்கு டி,இமான் இசையமைத்துள்ளார். யுவராஜ் பிலிம்ஸ் தயாரிப்பு நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. திரைப்படத்தின் டீசரை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டுள்ளார். படத்தின் டிரெய்லர் மற்றும் வெளியீட்டு தேதி விரைவில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இத்திரைப்படம் ஒரு குழந்தையை சுற்றியே நடக்கிறது. டீசரில் அனைவரும் ஒரே கேள்வியைதான் கேட்கிறார்கள். யாரோட குழந்தை டா இது ? என்று. டீசர் திரைப்படத்தின் மீது ஒரு எதிர்ப்பார்ப்பை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் படத்தின் முதல் பாடலான ஆரா அமுதே பாடலில் லிரிக் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்பாடலை யுகபாரதி வரிகளில் சைந்தவி பாடியுள்ளார்.

# தொடர் வெற்றியில் ஆசிஃப் அலியின் திரைப்படம் மெகா ஹிட்டான ரேகசித்திரம்





கடந்த செப்டம்பர் மாதம் ஆசிஃப் அலி நடிப்பில் தின்சித் அய்யதன் இயக்கத்தில் வெளியானது மலையாள திரைப்படமான கிஷ்கிந்தா காண்டம். இப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

ஆசிஃப் அலி அடுத்ததாக ரேகசித்திரம் என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.இப்படம் கடந்த 9 ஆம் தேதி வெளியாகி மக்களிடையே நல்ல வரவ்வேற்பை பெற்று வருகிறது. திரைப்படத்தில் மமூட்டி சிறப்பு தோற்றம் அளித்துள்ளது கூடுதல் சிறப்பாகும். இந்நிலையில் திரைப்படம் இரண்டு நாட்களில் உலகளவில் 10.2 கோடி ரூபாய் வசூலித்துள்ளது குறிப்பிடத்தக்கது. திரைப்பட காட்சிகள் பல இடத்தில் அதிகரித்துள்ளது. இப்படத்தை ஜோஃபின் டி சாக்கோ இயக்கியுள்ளார். இவர் இதற்கு முன் மம்மூட்டி மற்றும் மஞ்சு வாரியர் இணைந்து நடித்த தி பிரீஸ்ட் படத்தை இயக்கியது குறிப்பிடத்தக்கது.

அனஸ்வர ராஜன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இவர்களுடன் மனோஜ் கே ஜெயன், இந்திரன்ஸ்,சரின்ஷிஹாப், பாமா அருண் மற்றும் பலர்நடித்துள்ளனர். ஷமீர் முகமத் படத்தொகுப்பை மெற்கொள்ள முஜீப் மஜீத் இசையமைத்துள்ளார்.

# ராம் சரண் நடித்த கேம் சேஞ்சர் திரைப்படத்தின் முதல் நாள் வசூல் அறிவிப்பு




இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் தெலுங்கு நடிகர் ராம் சரண் கதாநாயகான நடித்துள்ள படம் 'கேம் சேஞ்சர்'. இப்படத்தில் எஸ்.ஜே. சூர்யா, கியாரா அத்வானி, அஞ்சலி, ஸ்ரீகாந்த், சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு தமன் இசையமைத்துள்ளார். இப்படம் நேற்று வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

திரைப்படத்தின் முதல் நாள் வசூலை படக்குழு அறிவித்துள்ளது. இந்நிலையில் திரைப்படம் உலகளவில் முதல் நாள் வசூலாக 186 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. வரும் நாட்களில் திரைப்படம் இன்னும் அதிக கோடிகளை வசூலிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடர்: அவரை அணியில் சேர்க்காதது குழப்பமாக உள்ளது இந்திய முன்னாள் வீரர்




இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி வரும் 22ம் தேதி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சூர்யகுமார் யாதவ் தலைமையிலான அந்த அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி நீண்ட நாட்கள் கழித்து இந்திய அணிக்கு திரும்பியுள்ளார். மேலும் துணை கேப்டன் பதவி ஹார்திக் பாண்ட்யாவிடமிருந்து பறிக்கப்பட்டு அக்சர் படேலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் இளம் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஆன ஜெய்ஸ்வால் மீண்டும் டி20 அணியில் இடம் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவருக்கு இந்த தொடரில் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அவர் கடைசியாக கடந்த ஆண்டு ஜூலை மாதம் இலங்கை அணிக்கு எதிரான டி20 தொடரில் விளையாடி இருந்தார். அதன்பிறகு டி20 போட்டிகளில் விளையாடவில்லை. இருப்பினும் இவர் எதிர்வரும் சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இடம்பெறுவார் என்று தகவல்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் ஜெயஸ்வால் இந்த டி20 தொடரில் இடம் பெறாதது தனக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "இங்கிலாந்து அணிக்கு எதிரான டி20 தொடரில் ஜெய்ஸ்வால் இடம்பெறாதது உண்மையிலேயே எனக்கு குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணியில் இடம் பெறப்போகும் ஜெய்ஸ்வால் அதற்கு முன்னதாக சில போட்டிகளில் விளையாடியாக வேண்டும். ஏனெனில் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் ரோகித் சர்மா மற்றும் சுப்மன் கில் ஆகியோரே தொடக்க வீரர்களாக களம் இறங்குவார்கள் என்பதனால் ஒருநாள் தொடரில் அவருக்கு வாய்ப்பு கிடைத்தாலும் பிளேயிங் லெவனில் இடம் கிடைக்காது. எனவே என்னை பொறுத்தவரை அவர் இங்கிலாந்து அணிக்கு எதிரான டி20 தொடரில் தொடக்க வீரராக ஜெய்ஸ்வால் விளையாடி இருக்க வேண்டும். ஆனால் தற்போது அவர் டி20 அணியில் இடம்பெறாததால் அடுத்த 45 நாட்களில் எவ்வித சர்வதேச போட்டியிலும் விளையாடாமல் அவர் நேராக சாம்பியன்ஸ் டிராபிக்கு செல்லவும் வாய்ப்புள்ளது" என்று கூறினார்.

# சாம்பியன்ஸ் டிராபி தொடர்: ஆப்கானிஸ்தான் அணி அறிவிப்பு



8 அணிகள் கலந்து கொள்ளும் சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 19ந் தேதி தொடங்கி மார்ச் 9ந் தேதி வரை நடக்கிறது. இந்த தொடருக்கான அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி குரூப் ஏவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, வங்காளதேசம் அணிகளும், குரூப் பியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம் பிடித்துள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இந்த தொடருக்கான அணிகளை அறிவிக்க ஐ.சி.சி. விதித்த காலக்கெடு இன்றுடன் முடிவடைகிறது. அதன்படி இந்த தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு கிரிக்கெட் வாரியமும் தங்களது அணிகளை அறிவித்து வருகின்றன.

அதன்படி இந்த தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. ஹஷ்மத்துல்லா ஷாஹிதி தலைமையிலான அந்த அணியில் முன்னணி வீரரான இப்ராஹிம் சத்ரான் நீண்ட நாட்கள் கழித்து இடம் பிடித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணி விவரம் பின்வருமாறு:

ஹஷ்மத்துல்லா ஷாஹிதி (கேப்டன்), இப்ராஹிம் சத்ரான், ரஹ்மானுல்லா குர்பாஸ், செடிகுல்லா அடல், ரஹ்மத் ஷா, இக்ராம் அலிகில், குல்பாடின் நைப், அஸ்மத்துல்லா உமர்சாய், முகமது நபி, ரஷீத் கான், ஏ.எம்.கசன்பர், நூர் அகமது, பசல்ஹக் பரூக்கி, பரித் மாலிக், நவீத் சத்ரான். ரிசர்வ் வீரர்கள்: தர்வீஷ் ரசூலி, நங்யால் கரோட்டி, பிலால் சமி

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.